1993 மார்ச் 31]

199—

தென்னாற்காடு மாவட்டத்தில் குளங்களில் மீன் வளர்க்க உதவி.

*9875—திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை குளங்களில் மீன் வளர்க்க அரசு உதவியுள்ளது ?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

கடந்த மூன்றாண்டுகளில் மீன்துறை மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் மீன் வளர்க்கப்பட்ட குளங்கள் எண்ணிக்கை வருமாறு :—

	1989—90	1990—91	1991—92
மீன்துறை மூலம் மீன் வளர்க்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை ..	8	8	8
சிதம்பரம் வட்டம்	3	3	3
உளுந்தூர்பேட்டை	5	5	5
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் மீன் வளர்க்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை	45	33	45

இக்குளங்களின் மூலம் கிடைக்கும் வருவாய் :—

	ரூ.	ரூ.	ரூ.
1. மீன் துறைக்கு குளங்கள் மூலம் கிடைத்த வருவாய் ..	10,552.00	10,580.00	12,524.00
2. (அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கு கிடைத்த வருவாய் ..	1,79,270.60	2,43,542.30	2,24,355.55
(ஆ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் மீன் வளர்ப்போருக்கு கிடைத்த வருவாய் ..	34,82,744.00	42,53,392.20	34,30,253.00

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மூலம் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் குஞ்சுகள் கடன்முறையில் வழங்கப்பட்டு, அக்கடன் தொகை மீன் அறுவடையின்போது வசூலிக்கப்படுகின்றது. தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் இடுபொருள் கடன் மற்றும் குளங்கள் புனரமைப்புக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. முதல் ஆண்டு மீன் வளர்ப்பவர்களுக்கு இடுபொருள் வாங்க மானியமாக ஹெக்டருக்கு அதிகபட்சமாக 4 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. குளம் புனரமைப்பிற்கு ஹெக்டருக்கு அதிகபட்சம் 8 ஆயிரமும், மீன் வளர்ப்பிற்கு பயிற்சிக் காலத்தில் உபகாரச் சம்பளமாக நாள் ஒன்றுக்கு 25 ரூபாயும் போக்குவரத்துக் கட்டணமாக மொத்தத்தில் ரூபாய் 40-ம் வழங்கப்படுகிறது.

1993 மார்ச் 31]

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களின் வாழ்வு வளம் பெறுவதில் கண்ணும் கருத்துமாக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு இருக்கிறது. குளங்களில் மீன் வளர்த்து மேம்பாடு செய்யும் வகையில் அரசு மீன் வளர்ப்பிற்கு மானியம் வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே மீன் வளர்ப்பதற்கு ஏற்ற நீர் நிலைகள் அதிகமாக இருக்கின்றன. அதனைக் கருத்தில் கொண்டு தான் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீனை அதிகமான பேர்கள் வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக தனியார் ஒருவர் மீன் வளர்க்க விரும்பினால் ஹெக்டருக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் மானியம் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 200, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. கு. லாரன்ஸ் கேட்கலாம். மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

200—

தமிழ்நாட்டிலுள்ள கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

*9517—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகள் இலாபத்தில் நடைபெறுகின்றதா?

(இ) நட்டத்தில் நடந்தால் அதை இலாபகரமாக நடத்த அரசு என்ன திட்டங்களை வைத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 75 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) லாபத்தில் நடைபெறும் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 45. நட்டத்தில் நடைபெறும் கயிறு தொழில் கூட்டு